DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.197/2024

Deposition of Witness : LW6/PW5

| Name | செல்வம் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | ஜெகதீசன் | Village | |
| Age | | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 29.**07.2025.** | | | |

( Accused 1,2,3 present )

சாட்சியை முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய முதல்நிலை காவலர் திரு.M. ஜான்பால் Gr-I 790 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது பண்ருட்டி வல்லம், வடக்குத் தெருவில் வசித்து, விவசாய வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி சுந்தர் என்பவரை தெரியும், அவரும் நான் வசிக்கும் தெருவில் வசிக்கிறார். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அதில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் யாருடையது என்று எனக்கு தெரியாது. மேற்படி பார்வை மகசரில் நான் கையொப்பம் செய்யும்போது, நான் மட்டும் தான் தனியாக கையொப்பம் செய்தேன். நான் வசிக்கும் வீட்டிற்கு வடதிசையில் அமைந்துள்ள தட்சணாமூர்த்தி என்பவரது வீட்டில் கடந்த 08.09.2021 அன்று காலையில் பிரச்சனை நடந்தது, என்ன பிரச்சனை என்று எனக்கு சரியாக தெரியாது. அன்றைய தினம் மாலை சுமார் 05.00, 05.30 மணியளவில் முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில் இருந்து 2 ஆண் நபர்கள் மேற்சொன்ன சண்டை, பிரச்சனையை பார்க்க வந்தார்கள். (சாட்சி மீண்டும் மேற்படி 2 ஆண் நபர்கள் மேற்சொன்ன காவல் நிலைய போலிசார் என்று சொன்னார் ) மேற்படி சண்டை உண்மையா என்று என்னிடம் கேட்டார்கள். நான் உண்மைதான் என்று அவர்களிடம் சொன்னேன். அதனால் நான் கையொப்பம் செய்தேன். மேற்படி எதில் கையொப்பம் செய்தேன் என்றால் தற்போது என்னிடம் காட்டப்பட்ட பார்வை மகசர் ஆவணத்தில் கையொப்பம் செய்தேன். மேற்படி நான் கையொப்பம் செய்த பார்வை மகசர் ஆவணத்துடன் அவர்கள் தயார் செய்த வரைபடத்தையும் என்னிடம் காட்டினார்கள். தற்போது என்னிடம் காட்டப்பட்ட வரைபடம் தான் அது. மேற்படி பார்வை மகசரில் நான் கையொப்பம் செய்வதற்கு முன்னர் என்னிடம் மேற்படி வழக்கு சண்டை நடந்த இடம், அதனை சுற்றியுள்ள சக்குபந்தி உள்ளதாக சொல்லி மேற்படி பார்வை மகசர் ஆவணத்தை என்னிடம் காட்டினார்கள். அதில் நான் மேற்படி கையொப்பத்தை செய்தேன். **மேற்படி பார்வை மகசர் ஆவணம் அ.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

ஆஜர் எதிரிகள் நான் வசிக்கும் வீட்டின் அருகில் வசிப்பவர்கள் என்ற வகையில் எனக்கு நன்கு பழக்கமானவர்கள் என்றால் சரிதான். மேற்படி போலிஸ் விசாரணையின்போது முதல் விசாரணையில் சொன்ன தேதியில் என்னிடமும், சுந்தர் என்பவரிடமும் முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ய போவதாகவும், அதற்கு எங்கள் இருவரையும் சாட்சிகளாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் அதற்கு நாங்கள் இருவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு, தற்போது ஆஜர் எதிரிகள் எனக்கு பழக்கமானவர்கள் என்பதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக எனது முதல் விசாரணையில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் யாருடையது என்று எனக்கு தெரியாது என்றும் மேற்படி பார்வை மகசரில் நான் கையொப்பம் செய்யும்போது, நான் மட்டும் தான் தனியாக கையொப்பம் செய்தேன் என்று சொல்லி அரசு தரப்பில் இருந்து பகுதியாக விலகி பகுதி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை.**